***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 563/2024 |
| | : | Prosecution P.W - 36 |
| NAME | : | **முருகன்** |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 08.07.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது பால்வண்ணநாதபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளிடம் சீட்டு போட்டிருந்தேன். அசா.1 கிருஷ்ணன் என்பவரை தெரியும். அசா.2 அந்தோணிராஜ் அசா.3 டேவிட் அமல்ராஜ் அசா.4 செல்வராஜ் . அசா.5 ஜோசப்ராஜ் அசா.6 அருமைகிளி ஆகியோரை தெரியாது. அசா.7 பாலமுருகன் தெரியும். அசா,8 செல்வராணி அசா.9 பூங்கொடி சூசை அசா.10 சீதாலெட்சுமி அசா.11 ராமலெட்சுமி அசா.12 பொன்பாண்டி, அசா.13 சாந்தி அசா.14 குணசீலன், அசா.15 முத்துலெட்சுமி அசா.16 செல்வகுமாரி ஆகியோரை தெரியாது. அசா.17 முருகன் தெரியும். அசா.18 சரோஜா, அசா.19 குமரேசன், அசா.20 மணிராஜ், அசா.21 பொன் சேகர், அசா.22 சுதா, அசா.23 ரவிகுமார், அசா.24 ஜெயஜோதி, அசா.25 ஜானகி, அசா.26 பவளக்கொடி அசா.27 தெய்வகனி ஆகியோரை தெரியாது. அசா.28 செல்வன் அசா.29 குற்றாலராமசுந்தரம் மகன் மாயவன் அசா.30 அருள்ஜெலஸ்டீன், அசா.31 அன்னபூரணி, அசா.32 ஜோசப்

அந்தோணி ராஜ், அசா.33 முத்துக்கனி அசா.34 வசுமதி அசா.35 இருளப்பன் ஆகியோரை தெரியாது.ஆஜர் எதிரிகள் 4–5 குழக்களாக சீட்டு பிரித்தார்கள். நான் ரூ.61000 சீட்டில் 2 சீட்டுகள் போட்டிருந்தேன். இரண்டு சீட்டுகளிலும் மொத்தம் பதினான்காயிரத்து சில்லறை ரூபாய் கட்டியிருந்தேன். சீட்டு பணத்தை நான் மாயவன் கோவிலில் ஞாயிற்றுக்கிழமை மாலை 7 முதல் 7.30 க்குள் கொடுப்போம். பணத்தை கொடுக்கும் பொழுது அதை வரவு வைத்து கொள்வார்கள். பின்னர் நான் சீட்டு பணத்தை கட்டவில்லை. கோவிலில் ஆள் இல்லை. அவர்கள் எங்கு போனார்கள் என்று எனக்கு தெரியாது. பொருள் வாங்குவதற்கு அவர் வாத்தியார் என்பதால் அவரிடம் சீட்டு போட்டிருந்தேன். பின்னர் என்ன நடந்தது யார் கேட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. தற்போது வரை சீட்டு பணம் எனக்கு கிடைக்கவில்லை.

வரவு வைத்த நோட்டுகள் என்ன ஆனது என்று எனக்கு தெரியாது. எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க யார் சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

மாயவன் கோவிலை நிர்வகிப்பது சம்பந்தமாக மாயவனுக்கும்,மகேஷ் மாயவனுக்கும் பிரச்சினை இருந்து வந்தது என்றால் சரிதான். மாயவன் கோவிலில் திருவிழா நடப்பது சம்பந்தமாக இருவரும் ஒருவரையொருவர் குற்றம் சாட்டிமாண்புமிகு உயர்நீதிமன்றம் வரை வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மகேஷ் மாயவன் என்பவர் தற்போதைய ஆளுங்கட்சி கடையம் ஒன்றிய சேர்மன் என்றால் சரிதான். சீட்டு பணம் நடத்தியதாக சொல்லும் நிலையில் எதிரிகளிடம் ஒரு தடவை கூட பணம் கொடுத்தது கிடையாது என்றால் அவர்களிடம் கொடுத்தது கிடையாது. முருகன் என்ற இன்னொரு பையனிடம் தான் கொடுப்போம். நான் ஒரு போதும் ஏலத்தில் கலந்து கொண்டிருப்பது கிடையாது என்றால் சரிதான். ரூ.61000 சீட்டில் எத்தனை நபர்கள் உறுப்பினராக இருந்தார்கள் என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மகேஷ் மாயவன் கோவில் நன்மைக்காக கோவிலில் சீட்டு பணம் நடத்தினார் என்றால் சரிதான்.

அசா.1 கிருஷ்ணன் தெரியும் என்று சொல்லி உள்ளநிலையில் கிருஷ்ணன் அப்பா பெயர் தெரியாது, எந்த ஊர் என்று தெரியாது. என்னை விசாரித்த போலிஸ் ஆண் போலிஸ். என்னிடம் போலிஸார் விசாரிக்கும் போது மாயவன் கோவிலில் வைத்து நான் மாயவனிடம் சீட்டு பணம் செலுத்தவில்லை, முருகன் என்பவரிடம் செலுத்தினேன் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். காவல்நிலையத்தில் யாரால் எப்போது புகார் கொடுக்கப்பட்டது என்ற

விவரமும் எனக்கு தெரியாது என்றால் தெரியாது. போலிஸார் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சீட்டு பணம் தராதது சம்பந்தமாக நான் எவ்வித புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மாயவன் கோவிலில் வைத்து மாயவன் கோவிலின் நன்மைக்காக அந்த ஊர் மக்களின் முக்கியஸ்தர்களால் சீட்டு பணம் நடத்துவது உண்டு என்றால் சரிதான். எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. சீட்டு பணத்தை நோட்டில் வரவு வைப்பது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் நேரடியாக பார்க்கவில்லை. முருகனிடம் சீட்டு பணம் கொடுத்தாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

ரூ.61000 சீட்டிற்கு வாரம் எவ்வுளவு கட்டுவேன் என்றால் ரூ.600 கட்டுவேன். இரண்டாவது வார சீட்டு மாயவன் கோவிலுக்கு என்றால் சரிதான். போலிஸ் என்னை விசாரித்த போது எந்தெந்த வாரம் எவ்வுளவு கட்டினேன் என்று பேப்பரில் எழுதி கொடுத்தேன் என்றால் சரிதான். ஏலச்சீட்டில் ஏலம் கேட்பவர்களுக்குஏலம் கேட்ட தொகை ஏலம் நடத்துபவர்களால் கொடுக்கப்படும் என்றால் சரிதான். வழக்கில் நான் சொல்லி உள்ளது போல் சீட்டு போடவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்வது போல் இந்த வழக்கிற்கும் இரண்டாம் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரியோ, அவருக்கு வேண்டபட்டவர் யாரோ தனிப்பட்ட முறையில் சீட்டு நடத்தபடவில்லை என்றால் சரியல்ல. (1 வது எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொண்டதாக 2 வது எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரால் கூறப்பட்டது.)

மறுவிசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi